**My No**:- NP/09/FRM/2007 **Date:** - 29.04.2007

**மாகாணத் திறைசேரி சுற்றுநிருபம் இல :- PT/10(01) / 2007**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடமாகாணம்.

## அரச அலுவலர்கள் பெற்றுக் கொள்ளாத விடுமுறைக்களுக்கான ஊக்குவிப்புப் படி செலுத்துதல்.

மாகாணத் திறைசேரி சுற்றுநிருபம் 10/2007 ன் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

மேற்படி சுற்றுநிருபத்தின் பந்தி 12 நீக்கப்பட்டு பின்வருமாறு பதிலீடு செய்யப்படுகிறது.

குறிப்பிட்ட வருடத்தினுள் புதிதாக நியமனம் பெற்ற அரச சேவை உத்தியோகத்தர்கள் ஒன்பது மாதம் முடியும் வரை இவ் ஊக்குவிப்புப் படிக்கு உரித்துடையவராகார். டிசெம்பர் 31ம் திகதியில் 09 மாதங்கள் பூ ர்த்தியாகவில்லையாயின் அவ் உத்தியோகத்தருக்கு இவ் ஊக்குவிப்புப்படி வழங்கமுடியாது. ஒன்பது மாதங்கள் முடிவுற்றவர்களின் விடயத்தில் முனைப்பான சேவைக்காலம் (Active Service) என்பதை அடிப்படையாகக் கொண்டு அட்டவணை I ல் காட்டப்பட்டபடி ஊக்குவிப்புப்படி கணிப்பிட்டு வழங்கமுடியும்.

**2006**ம் ஆண்டு மார்ச் மாதத்தில் முதலாம் திகதிக்குப் பிந்திய பிறிதொரு திகதியில் நியமனம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரைப் பொறுத்தவரை அவரின் முனைப்பான சேவைக்காலம் 09 மாதங்கள் மட்டுமே(இவர் மார்ச் 01ம் திகதி நியமனம் பெற்றிருப்பின் 10மாதங்கள் முனைப்பான சேவைக்காலமாகக் கொள்ளலாம்). எனவே அட்டவணையில் 09 மாதங்களிற்கு ஊக்குவிப்புப்படிக்கு தகுதியான நாட்கள் 22½ நாட்கள் ஆகும். எனவே மிகுதியாகப் பெறப்படாத விடுமுறை (ஏழு நாட்கள் தவிர) 22½ நாட்களுக்கு குறையாமல் இருப்பின் 22½ நாட்களுக்கான கொடுப்பனவு மேற்கொள்ள முடியும். மேலதிகமாக விடுமுறை பெற்றிருப்பின் ஊக்குவிப்புப்படி அந்த நாட்களின் எண்ணிக்கையால் குறைக்கப்படல் வேண்டும்.

இவ் உதாரணம் பந்தி 10ல் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்.

ஆ.செல்லத்துரை
பிரதிப் பிரதம செயலாளர் - நிதி
பிரதம செயலாளருக்காக.

பிரதி:-

1. செயலாளர், மாகாணப் பொதுநிர்வாக அமைச்சு – வமா
2. பிரதிப் பிரதம செயலாளர் - உள்ளகக் கணக்காய்வு – வமா
3. கணக்காய்வாளர் நாயகம்

தகவலுக்காக

உதாரணம்:-

**2006**ம் ஆண்டு மார்ச் மாதத்தில் முதலாம் திகதிக்குப் பிந்திய பிறிதொரு திகதியில் நியமனம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரைப் பொறுத்தவரை அவரின் முனைப்பான சேவைக்காலம் 09 மாதங்கள் மட்டுமே (இவர் மார்ச் 01ம் திகதி நியமனம் பெற்றிருப்பின் 10மாதங்கள் முனைப்பான சேவைக்காலமாகக் கொள்ளலாம்).

எனவே அட்டவணையில் 09 மாதங்களிற்குரிய ஊக்குவிப்புப்படிக்கு தகுதியான நாட்கள் 22½ நாட்கள் ஆகும். ஆகவே மிகுதியாகப் பெறப்படாத விடுமுறை (ஏழு நாட்கள் தவிர) 22½ நாட்களுக்கு குறையாமல் இருப்பின் 22½ நாட்களுக்கான கொடுப்பனவு மேற்கொள்ள முடியும். மேலதிகமாக விடுமுறை பெற்றிருப்பின் ஊக்குவிப்புப்படி அந்த நாட்களின் எண்ணிக்கையால் குறைக்கப்படல் வேண்டும்.

இவ் உதாரணம் பந்தி 10ல் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்.

ஆ.செல்லத்துரை
பிரதிப் பிரதம செயலாளர் - நிதி
பிரதம செயலாளருக்காக

பிரதி:-

1. செயலாளர், மாகாணப் பொதுநிர்வாக அமைச்சு – வமா
2. பிரதிப் பிரதம செயலாளர் - உள்ளகக் கணக்காய்வு – வமா
3. கணக்காய்வாளர் நாயகம்

} தகவலுக்காக